**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE FAST TRACK COURT, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | CC.66/2022 |
| Deposition of witness | | PW1/ LW1 |
| Name | | திரு. ராஜசேகர் |
| Father's/Husband Name | | திரு. முருகையா |
| Village | | நடுவிக்கோட்டை |
| Taluk | | பட்டுக்கோட்டை |
| Caste | | - |
| Calling | | - |
| Religion | | - |
| Age | | 73/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 06th day June 2024

**(சாட்சியிடம் சத்தியப்பிரமானம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது**
**எதிரி 1,3 ஆகியோர் ஆஜர். எதிரி 2 ஆஜரில் இல்லை. எதிரி தரப்பில் 317 குவிமுச மனு கொடுக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் நடுவிக்கோட்டை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய கூலி வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும், எனது உறவினர்கள். 1 வது எதிரி எனது தம்பி மகன். 2 வது எதிரி ஜெயபாரதி 1 வது எதிரியின் மனைவி. 3 வது எதிரி வனரோஜா 1 வது எதிரியின் தாயார். சுமார் 06 வருடங்களுக்கு முன்பு காலை சுமார் 08.00-09.00 மணிக்குள் எனது வீட்டு வாசலுக்கு அருகில் உள்ள சீத்தா மரங்களை நான் வெட்டிக்கொண்டிருந்தேன். ஆஜர் எதிரிகள் வந்து மரத்தை வெட்டக்கூடாது என்று சத்தம் போட்டார்கள். 1 வது எதிரி அரவிந்தன் கம்பாலும் கையாலும் முதுகிலும், முகத்திலும் என்னை அடித்தார். 2,3 எதிரிகள் என்னை கையால் உடல் முழுவதும் குத்தினார்கள். எனக்கு மயக்கம் வந்தது, என்னை கொன்றுவிடுவேன் என்று மிரட்டிவிட்டு சென்றார்கள். அதன் பிறகு நான் பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்தேன். அங்கு போலிசார் வந்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கையொப்பம் என்னுடையதான். அந்த புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அந்த புகார் வாக்குமூலம் **அசாஆ 1** ஆகும். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

## <u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. போலிசார் என்னிடம் எத்தனை கையொப்பம் வாங்கினார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு எழுதப்படிக்க தெரியாததால் எனக்கு தெரியாது. சம்பவத்தின்போது எதிரிகளை தவிர வேறு யாரும் சம்பவ இடத்தில் இல்லை. புகார் வாக்குமூலத்தில் கையொப்பம் இட்ட பிறகு மீண்டும் போலிசார் வந்து என்னிடம் மீண்டும் கையொப்பம் வாங்கவில்லை. சாட்சி ராதாகிருஷ்ணன் என் மகன் தற்போது வெளிநாட்டில் இருந்து வருகிறார். சம்பவத்திற்கு முன்பு ஒரு வருடமாக எனக்கும் எதிரிகளுக்கும் இடத்தகராறு இருந்து வந்தது. அபிநயா என்பது எதிரி வனரோஜாவின் மகள். எனது மகன் ராதாகிருஷ்ணன் மீது அபிநயா காவல் நிலையத்தில் குற்ற புகார் கொடுத்து ஜாமீனில் வெளியே வந்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கு பட்டுக்கோட்டை நடுவர் நீதிமன்றத்தில் CC.No.17/2018 வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். 1 வது எதிரி அரவிந்தன், எனது மற்றும் எனது மகன் ராதாகிருஷ்ணன் மீதும் காவல் நிலையத்தில் குற்ற புகார் கொடுத்து ஜாமீனில் வெளியே வந்தோம் என்றார் சரிதான். அந்த வழக்கானது பட்டுக்கோட்டை நடுவர் நீதிமன்றத்தில் CC.No.108/2016 வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். 3 வது எதிரி வனரோஜா, எனது மீது காவல் நிலையத்தில் குற்ற புகார் கொடுத்து ஜாமீனில் வெளியே வந்தேன் என்றார் சரிதான். அந்த வழக்கானது வாட்டாத்திக்கோட்டை காவல் நிலைய குற்ற எண்.50/2014 என வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். 2014 ம் ஆண்டிலிருந்து நானும் எனது மகனும் எதிரிகளிடம் பிரச்சனை செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. ஒரே வீட்டில் இரு சமமாக பிரித்துக்கொண்டு எதிரிகளும் நாங்களும் வாழ்ந்து வருகிறோம் என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கு கீழ் புறம் மனோகரன், மாதவன் ஆகியோர் வீடுகள் உள்ளது. சம்பவ இடத்திற்கு அருகில் வசிக்கும் கங்காதரன், ராஜரெத்தினம் ஆகியோர்களுக்கு சம்பவம் நடந்தது தெரியும்.

2. என்னை பெரமாயி, க/பெ.கருப்பையா என்பவர் மருத்துவமனையில் சேர்த்தார். சம்பவம் நடந்தபோது ராதாகிருஷ்ணன் வீட்டில் இல்லை. எனது மகன் ராதாகிருஷ்ணன் என்னை மருத்துவமனையில் சேர்க்கவில்லை. போலிசாரிடம் சம்பவ இடத்தை யார் காட்டினார்கள் என்று தெரியாது. சீத்தா மரத்தின் கிளையை நான் வெட்டியதால்தான் தகராறு ஏற்பட்டது என்றால் சரிதான். எனது மகன் ராதாகிருஷ்ணன் வெளிநாட்டிற்கு சென்று ஒரு வருடமாகிவிட்டது. 2 வது எதிரி சம்பவத்தின்போது கர்ப்பமாக இருந்தாரா என்றால் எனக்கு தெரியாது. நாங்கள் தான் எதிரிகள் மீது தொடர்ந்து தொந்தரவு செய்தோம் என்றாலும், எதிரிகள் போட்ட வழக்கிலிருந்து தப்பிக்க வேண்டும் என்பதற்காக இந்த வழக்கை பொய்யாக கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

Signature of witness

*Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.*

Judicial Magistrate,
Fast Track Court (Magisterial Level)
Pattukkottai.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE FAST TRACK COURT, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | CC.66/2022 |
| Deposition of witness | | PW2/LW2 |
| Name | | திருமதி. பெரமாயி |
| Father's/Husband Name | | திரு. கருப்பையா |
| Village | | நடுவிக்கோட்டை |
| Taluk | | பட்டுக்கோட்டை |
| Caste | | - |
| Calling | | - |
| Religion | | - |
| Age | | 75/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 06th day June 2024

**(சாட்சியிடம் சத்தியப்பிரமானம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது**

**முதல் விசாரணை**

நான் நடுவிக்கோட்டை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய கூலி வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும், எனது ஒரே ஊரை சேர்ந்தவர்கள். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. நான் எந்த சம்பவத்தையும் நேரடியாக பார்க்கவும் இல்லை கேள்விபடவும் இல்லை. அசா 1 னு ஆஜர் எதிரி மீது புகார் மனு கொடுத்தது சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

( அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது )

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை விசாரித்ததாகவும், போலிசார் விசாரணையில் கடந்த 19.09.2018 அன்று காலை 08.30 மணியளவில் அசா1 ராஜசேகரன், அவர் வீட்டின் வடபுறம் உள்ள சீத்தா மரங்களை வெட்டி சுத்தம் செய்துக்கொண்டிருந்தார் என்றும் அபப்போது எதிரிகள் வந்து அசா1 ஐ தேவடியா குச்சிகாரி என்று ஆபாசமாக திட்டி 1 வது

எதிரி கம்பால் அவரது மூக்கிலும் அவரது வலது நெற்றியிலும் குத்தினார்கள் என்றும், 2,3 எதிரிகள் அவரை பிடித்துக்கொண்டார்கள் என்றும், 2,3 எதிரிகள் கையால் கழுத்திலும், நெஞ்சிலும் மாறி மாறி அடித்தார்கள் என்று வலி தாங்காமல் அசா1 கத்தும்போது 1 வது எதிரி அவரை பார்த்து எப்போ இருந்தாலும் உன் உயிர் உன் கையில் தான் என்று கொலை மிரட்டல் விடுத்தார் என்றும், அதனை நான் நேரில் பார்த்ததாகவும், போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டபடியாலும், எதிரி தெரிந்த நபர் என்பதாலும், தங்களுக்கே தெரிந்த காரணங்களுக்காகவும், எதிரிகளை குற்ற வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கில் எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் உண்மைக்கு புறம்பாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Signature of witness

*Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.*

Judicial Magistrate,
Fast Track Court (Magisterial Level)
Pattukkottai.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE FAST TRACK COURT, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | CC.66/2022 |
| Deposition of witness | | PW3/LW5 |
| Name | | திரு. சரபோஜி |
| Father's/Husband Name | | திரு. தம்பியய்யா |
| Village | | நடுவிக்கோட்டை |
| Taluk | | பட்டுக்கோட்டை |
| Caste | | - |
| Calling | | - |
| Religion | | - |
| Age | | 50/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 06th day June 2024

**(சாட்சியிடம் சத்தியப்பிரமானம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது**

**<u>முதல் விசாரணை</u>**

நான் நடுவிக்கோட்டை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும், எனது ஒரே ஊரை சேர்ந்தவர்கள். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. கடந்த 2018 ம் ஆண்டு என் வீட்டில் இருந்தபோது வாட்டாத்திக்கோட்டை போலிசார் வந்து ஆஜர் எதிரிகளுக்கும் அசா1 க்கும் இடையே ஏற்பட்ட தகராறு சம்பந்தமாக என்னிடம் விசாரித்தார்கள். ஆனால் அது பற்றி எனக்கு தெரியாது என்று போலிசாரிடம் சொன்னேன். போலிசார் வந்து சென்றதற்காக என்னிடம் கையொப்பம் கேட்டதால் கையொப்பம் போட்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது அது **அசாஆ 2** ஆகும். அசா1 ஆஜர் எதிரி மீது கொடுத்த புகார் பற்றி எனக்கு தெரியாது. என் முன்பாக சம்பவ இடத்தை பார்வையிடவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

( அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய

அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது )

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலிசார் என்னை விசாரித்ததாகவும், போலிசார் விசாரணையில் 21.09.2018 ந் தேதி காலை 08.00 மணிக்கு நானும் தினகரன் என்பவரும் நடுவிக்கோட்டை மேலத்தெருவில் வந்துக்கொண்டிருந்தபோது சம்பவம் சம்பந்தமாக வாட்டாத்திக்கோட்டை போலிசார் சம்பவ இடத்தை எங்கள் இருவர் முன்னிலையிலும் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தனர் என்றும், அந்த பார்வை மகசரில் நாங்கள் இருவரும் சாட்சிகயாக கையெழுத்து போட்டோம் என்றும், அந்த பார்வை மகசர் தற்போது நீதிமன்றத்தில் காட்டடப்படுவதுதான் என்றும், போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டபடியாலும், எதிரிகள் தெரிந்த நபர் என்பதாலும், தங்களுக்கே தெரிந்த காரணங்களுக்காகவும், எதிரிகளை குற்ற வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கில் எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் உண்மைக்கு புறம்பாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Signature of witness

*Taken down by the typist under my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
*by him to be Correct.*

Judicial Magistrate,
Fast Track Court (Magisterial Level)
Pattukkottai.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE FAST TRACK COURT, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | CC.66/2022 |
| Deposition of witness | | PW4/LW6 |
| Name | | திரு. தினகரன் |
| Father's/Husband Name | | திரு. கருண்யம் |
| Village | | நடுவிக்கோட்டை |
| Taluk | | பட்டுக்கோட்டை |
| Caste | | - |
| Calling | | - |
| Religion | | - |
| Age | | 56/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 06th day June 2024

**(சாட்சியிடம் சத்தியப்பிரமானம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது**

**முதல் விசாரணை**

நான் நடுவிக்கோட்டை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும், எனது ஒரே ஊரை சேர்ந்தவர்கள். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. தேதி, மாதம், வருடம் ஞாபகம் இல்லை. என் வீட்டில் இருந்தபோது வாட்டாத்திக்கோட்டை போலிசார் வந்து ஆஜர் எதிரிகளுக்கும் அசா1 க்கும் இடையே ஏற்பட்ட தகராறு சம்பந்தமாக என்னிடம் விசாரித்தார்கள். ஆனால் அது பற்றி எனக்கு தெரியாது என்று போலிசாரிடம் சொன்னேன். போலிசார் வந்து சென்றதற்காக என்னிடம் கையொப்பம் கேட்டதால் கையொப்பம் போட்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது அது **அசாஆ 3** ஆகும். அசா1 ஆஜர் எதிரி மீது கொடுத்த புகார் பற்றி எனக்கு தெரியாது. என் முன்பாக சம்பவ இடத்தை பார்வையிடவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

( அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய

அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது )

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலிசார் என்னை விசாரித்ததாகவும், போலிசார் விசாரணையில் 21.09.2018 ந் தேதி காலை 08.00 மணிக்கு நானும் அசா3 சரபோஜி என்பவரும் நடுவிக்கோட்டை மேலத்தெருவில் வந்துக் கொண்டிருந்தபோது சம்பவம் சம்பந்தமாக வாட்டாத்திக்கோட்டை போலிசார் சம்பவ இடத்தை எங்கள் இருவர் முன்னிலையிலும் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தனர் என்றும், அந்த பார்வை மகசரில் நாங்கள் இருவரும் சாட்சியாக கையெழுத்து போட்டோம் என்றும், அந்த பார்வை மகசர் தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படுவதுதான் என்றும், போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டபடியாலும், எதிரிகள் தெரிந்த நபர் என்பதாலும், தங்களுக்கே தெரிந்த காரணங்களுக்காகவும், எதிரிகளை குற்ற வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கில் எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் உண்மைக்கு புறம்பாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Signature of witness

*Taken down by the typist under my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
*by him to be Correct.*

Judicial Magistrate,
Fast Track Court (Magisterial Level)
Pattukkottai.